**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 156/2022 P.W. 5/L.W.8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | டாக்டர். திரு. ஜோசப் சென் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 21.05.2025.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

**1.** நான் ஆசாரிபள்ளம் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் முதன்மை குடிமை மருத்துவராக பணியாற்றி ஓய்வு பெற்றுவிட்டேன். 02.03.2020 ம்தேதி காலை 07.35 மணியளவில் நான் பணியில் இருந்தபோது திரு. ஜேக்கப்ராஜ் என்ற 45 வயது மதிக்கதக்க ஆண் நபரை அவடைய சகோதரி திருமதி. ரீற்றா ஜாக்குலின் என்பவர் அவர் மேல்பட்ட காயங்களுக்காக சிகிட்சைப்பெற வந்தார்.

2. நான் அவரை பரிசோதித்தபோது அவரை அவருக்கு தெரிந்த 2 நபர்கள் வெட்டுக்கத்தி மற்றும் இரும்பு கம்பிக்கொண்டு அன்றையதினம் அதிகாலை 05.00 மணிக்கு ஒத்தப்பனவிளை என்ற இடத்தில் வைத்து தாக்கியதாக கூறினார். அவர் சுயநினைவுடன் காணப்பட்டார். கேள்விகளுக்குபதில் சொல்லும் நிலையில் தெளிவாக இருந்தார். அவருக்கு கீழ்கண்டகாயங்கள் காணப்பட்டன

காயம் 1. 5 x 4 cm அளவுகளை உடைய வீக்க காயம் அவருடைய இடது கை சுண்டுவிரலின் அடிப்பாகத்தில் காணப்பட்டது.

காயம் 2. 3x 1 cm x 1 cm அளவுடைய சிதைந்த காயம் அவருடைய மோதிரவிரலின் உள்ளங்கை பக்கத்தில் காணப்பட்டது.

காயம் 3. மார்பில் தொடுவலி இருப்பதாக கூறினார். அதில் தொடுவலி இருந்தது.

காயம்4. 2 x 0.5x 0.5 cm அளவுடைய சிதைந்த காயம் அவருடைய இடது காலில் காணப்பட்டது.

காயம் 5. 10x 2x 2 cm அளவுடைய சிதைந்த காயம் அவருடைய தலையின் பின்பகுதியில் வலது பக்கத்தில் காணப்பட்டது.

நான் அவருக்கு சிகிட்சை அளித்து அவரை உள்நோயாளியாக அனுமதித்தேன். அவருக்கு மருத்துவமனையில் சிறப்பான சிகிட்சை அளிக்கப்பட்டது. அவர் 09.03.2020 ம் தேதி பிற்பகல் 03.00 மணிக்கு மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

காயங்களின் தன்மை, அவருக்கு எடுக்கப்பட்ட எக்ஸ்ரேயில் இடது கையில் உள்ள 5 வது விரல் எலும்பில் முறிவு காணப்பட்டது. காலுக்கு எடுக்கப்பட்ட எக்ஸ்ரேயில் இடது காலில் உள்ள எலும்பில் முறிவு ஏற்பட்டிருந்தது. நெஞ்சிற்கு எடுக்கப்பட்ட CT Scan ல் அவருடைய இடது விலா எலும்பில் 5 மற்றும் 6 வது எலும்பு முறிவு காணப்பட்டது.

காயத்தின் தன்மையைப் பொறுத்து மேற்படி எலும்பு முறிவு காயங்கள் கொடுங்காயங்கள் என்று சான்று அளித்தேன். **மேற்படி நான் அளித்த கருத்துரையுடன் கூடிய விபத்து பதிவேடு அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை** :

2, 4, 5 வது காயங்கள் சிதைந்த காயங்கள் என்றால் சரிதான். மேற்படி காயங்கள் கடினமான தளத்தில் விழும்போது ஏற்பட வாய்ப்பு உண்டா என்றால் இல்லை. ஆழமான குழியில் விழும் போது மேற்படி காயம் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் இல்லை. காயமானது வெட்டுக்கத்தி மற்றும் இரும்பு கம்பியால் ஏற்படுத்தியதாக சொல்லப்பட்டுள்ளது. மேற்படி காயங்கள் வெட்டுக்கத்தியால் ஏற்பட வாய்ப்பு உண்டா என்றால் - ஆம் உண்டு. நான் சொல்வது சரியில்லை என்றால் சரியல்ல.

2. நான் சொன்ன 1வது காயம் பலமாக ஓங்கி கடினமான தரையில் பட்டால் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் ஆம் உள்ளது. தொடுவலி வலி இல்லாமல் கூட சொல்லாம்

என்றால் சரிதான். ஆனால், நான் பரிசோதிக்கும் போது தொடுவலி காணப்பட்டது. அவருக்கு CT Scan எடுக்கப்பட்டதில் விலா எலும்புகள் முறிவினால் அது காணப்பட்டது.

குறுக்கு விசாரணை- முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.